# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1985 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க,
# மலத்தியன் கட்டுப்பாட்டுச் சட்டம்

---

*[1985, ஜூன் மாதம் 21 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1985, ஜூன் மாதம் 21 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

**கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.**

விலை : சதம் 90 — தபாற் செலவு : சதம் 60

# 1985 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, மலத்தியன் கட்டுப்பாட்டுச் சட்டம்

[1985, ஜூன் மாதம் 21 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 36/79
1287

**அதிகாரம் பெருத தனியாட்களினுல் இலங்கையில் மலத்தியன் வைத்திருக்கப்படுவதையும் இடம்பெயர்க்கப்படுவதையும் விற்பனை செய்யப்படுவதையும் பயன்படுத்தப்படுவதையும் தடைசெய்வதற்கும், அத்துடன் அவற்றேடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1985 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, மலத்தியன் கட்டுப்பாட்டுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறன அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

2. இதனகத்துப்பின்னர் "பூச்சிகொல்லி" எனக் குறிப்பீடுசெய்யப்படும் மலத்தியனை இறக்குமதி செய்வதற்கான தனி அதிகாரி, இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படுபவரான சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதியின் ஊடாக அப்போதைக்குச் செயலாற்றும் அரசு ஆதல் வேண்டும். மலத்தியன் இறக்குமதி செய்வதற்கான தனி அதிகாரி.

3. சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மலேரியா தடுப்பியக்கத்தின் நோக்கத்திற்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியினுல் முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களைத் தவிர்ந்த வேறு ஆள் எவரும் பூச்சிகொல்லியைத் தமதுடைமையில் வைத்திருத்தலோ, இடம்பெயர்த்தலோ, விற்பனைசெய்தலோ, பயன்படுத்துதலோ ஆகாது. பூச்சிகொல்லியை உடைமையில் வைத்திருத்தல், விற்பனைசெய்தல், இடம்பெயர்த்தல், பயன்படுத்தல் என்பனமீதான மட்டுப்பாடுகள்.

4. (1) இச்சட்டத்தில் வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதியே இச்சட்டத்தின் பொது நிருவாகத்துக்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும். சட்டத்தை நிருவகித்தல்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், இச்சட்டத்தின் அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதனையும் நிறைவேற்றுதல், வலிவுறுத்தல் என்பன தொடர்பில் அவசியமானவையெனத் தாம் கருதக்கூடியவாறன அத்தகைய பணிப்புகளைத் தமது திணைக்களத்திலுள்ள எவரேனும் அலுவலருக்கு விடுக்கலாம் என்பதோடு, அவ்வாறு பணிப்புகள் விடுக்கப்பட்ட அத்தகைய ஒவ்வோர் அலுவலரும் அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், அமைச்சரின் அங்கீகாரத்துடன் இச்சட்டத்தின்கீழ் தமக்குள்ள தத்துவங்கள், கடமைகள், பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையேனும் எவரேனும் கீழமைந்த அலுவலருக்கு பெயர்குறித்து அல்லது பதவிகுறித்து கையளிக்கலாம் என்பதோடு, அத்தகைய தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் அவ்வாறு எந்த அலுவலருக்குக் கையளிக்கப்படுகின்றனவோ, அத்தகைய எவரேனும் அலுவலர் பணிப்பாளர் தலைமையதிபதியின் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளுக்கமைய அவற்றைப் பிரயோகித்தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதல் வேண்டும்.

2—எ 083532—2,815 (04/85)

அதிகாரம்பெற்ற அலுவலர்.

5. பணிப்பாளர் தலைமையதிபதியானவர், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, மலேரியா தடுப்பியக்கத்திலுள்ள எவரேனும் அலுவலரை அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவராயிருக்குமாறு பெயர்குறித்து நியமிக்கலாம்.

அதிகாரம்பெற்ற அலுவலர்களின் தத்துவங்கள்.

6. (1) அதிகாரம்பெற்ற அலுவலர் தமது கடமைகளைப் புரிவதற்காகவும் தமது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காகவும்—

(அ) பூச்சிகொல்லி தயாரிக்கப்படுகின்ற, பொதியிடப்படுகின்ற அல்லது களஞ்சியப்படுத்தப்படுகின்ற இடம் என அவர் நம்பும் ஏதேனும் இடத்தினுள், ஏதேனும் நியாயமான நேரத்தில் நுழையலாம் என்பதுடன், அவற்றைப் பரிசோதனை செய்யலாம், அவற்றின் மாதிரிப் பொருட்களை எடுக்கலாம், அத்துடன் பூச்சிகொல்லியின் தயாரிப்புக்கு, பொதியிடுகைக்கு அல்லது களஞ்சியப்படுத்துகைக்குப் பயன்படுத்தப்படுகின்றது என அவர் நம்பும் ஏதேனும் பொருளை, கருவியை, உபகரணத்தை அல்லது வேறு பண்டத்தை பரிசோதனை செய்யலாம் ;

(ஆ) தேடுகை நோக்கத்துக்காக, எந்த வாகனத்தில் பூச்சிகொல்லி இடம்பெயர்க்கப்படுகின்றதென அவர் நம்புகின்றாரோ அத்தகைய ஏதேனும் வாகனத்தை நிறுத்தலாம் அல்லது தடுத்து வைக்கலாம், தேடுகையிடலாம், பூச்சிகொல்லியைப் பரிசோதனை செய்யலாம், அத்துடன் அதன் மாதிரிப் பொருட்களை எடுக்லாம் ;

(இ) பூச்சிகொல்லியை உள்ளடக்குவதாக அவர் நம்பும் ஏதேனும் கொள்கலனை அல்லது பொதியைத் திறக்கலாம், அத்துடன் பரிசோதனை செய்யலாம் ; அல்லது

(ஈ) எந்தப் பூச்சிகொல்லியின் மூலம் அல்லது எந்தப் பூச்சிகொல்லி தொடர்பில் இச்சட்டத்தின் அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு முரணாகச் செயலாற்றப்பட்டுள்ளது அல்லது செயலாற்றப்படுகின்றது என, அல்லது அந்த ஏற்பாடு மீறப்பட்டுள்ளது அல்லது மீறப்படுகின்றது என அவர் நம்புகின்றாரோ அத்தகைய பூச்சிகொல்லியைக் கைப்பற்றலாம், அத்துடன் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய காலத்திற்கு அதனைத் தடுத்துவைக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழ் செயலாற்றும் அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவர், தமது அதிகாரப் பத்திரத்தைக் காண்பிக்குமாறு தேவைப்படுத்தப்படின் அவ்வாறு காண்பித்தல் வேண்டும்.

(3) அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் செயலாற்றுமிடத்து, அவர், வசதியாகக்கூடியவாறான அளவு விரைவாக அத்தகைய நடவடிக்கை பற்றிப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்கான காரணங்களை கூறுதலும் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழ் அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளின்கீழ் தமது தத்துவங்களை பிரயோகிக்கும்போது செயலாற்றும் எவரேனும் அதிகாரம்பெற்ற அலுவலரை ஆளெவரும் தடைசெய்தல் ஆகாது.

(5) இச்சட்டத்தின்கீழ், அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் தமது தத்துவத்தைப் பிரயோகிப்பதில் ஈடுபட்டுள்ள எவரேனும் அதிகாரம்பெற்ற அலுவலருக்கு, ஆளெவரும் தெரிந்துகொண்டு பொய்யான அல்லது பிழைவழி உய்க்கும் எவையேனும் கூற்றுக்களை வாய்மொழிமூலமாகவேனும் எழுத்துமூலமாகவேனும் அளித்தலாகாது.

(6) அதிகாரம்பெற்ற அலுவலரொருவரால் இச்சட்டத்தின்கீழ் கைப்பற்றப்பட்ட பூச்சிகொல்லியை அந்த அலுவலரின் அனுமதியின்றி ஆளெவரும் அகற்றலோ அல்லது ஏதேனும் விதத்தில் அதனுடன் தலையிடலோ ஆகாது.

(7) இச்சட்டத்தின்கீழ் கைப்பற்றப்பட்ட ஏதேனும் பூச்சிகொல்லி, அதிகாரம்பெற்ற அலுவலரின் விருப்பத்தின்படி, அது எந்தக் கட்டடத்தில் அல்லது இடத்தில் கைப்பற்றப்பட்டதோ அந்தக் கட்டடத்திலேயே அல்லது இடத்திலேயே வைக்கப்படலாம் அல்லது களஞ்சியப்படுத்தப்படலாம் அல்லது அவரது தற்றுணிபின்படி வேறு ஏதேனும் இடத்திற்கு அகற்றப்படலாம்.

கைப்பற்றப்பட்ட பூச்சிகொல்லி தொடர்பிலான நடவடிக்கை முறை.

7. (1) எந்தப் பூச்சிகொல்லி தொடர்பில் தவறொன்று புரியப்பட்டுள்ளதோ அந்தப் பூச்சிகொல்லி, அதிகாரம்பெற்ற அலுவலரொருவரால் இச்சட்டத்தின்கீழ் கைப்பற்றப்பட்டிருப்பதோடு, இச்சட்டத்தின் அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுள் எதுவும் மீறப்பட்டுள்ளது எனப் பணிப்பாளர் தலைமையதிபதி திருப்திப்படுமிடத்தும், அத்துடன் அத்தகைய பூச்சிகொல்லியின் சொந்தக்காரர் அல்லது கைப்பற்றப்படும் நேரத்தில் அதனைத் தமதுடைமையில் வைத்திருக்கும் ஆள் அத்தகைய பூச்சிகொல்லி பணிப்பாளரால் வேறு ஏதேனும் முறையில் அழிப்பதற்கு அல்லது கையாளப்படுதற்கு எழுத்தில் சம்மதிப்பாராயின், அத்தகைய பூச்சிகொல்லி, பணிப்பாளர் தலைமையதிபதி பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் அழிக்கப்படலாம் அல்லது கையாளப்படலாம்.

(2) பூச்சிகொல்லியின் சொந்தக்காரர் அல்லது அதனைத் தமதுடைமையில் வைத்திருக்கும் ஆள், பூச்சிகொல்லி வேறு ஏதேனும் முறையில் அழிக்கப்படுதற்கு அல்லது கையாளப்படுதற்கு எழுத்தில் சம்மதிக்காதவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதியானவர்—

(அ) பூச்சிகொல்லியின் சொந்தக்காரர் அல்லது அதனைத் தமதுடைமையில் வைத்திருக்கும் ஆள், பூச்சிகொல்லியைத் தமதுடைமையில் வைத்திருப்பதற்கு, இடம்பெயர்ப்பதற்கு, விற்பனை செய்வதற்கு அல்லது பயன்படுத்துவதற்குத் தாம் அதிகாரம் பெற்றுள்ளார் எனப் பணிப்பாளர் தலைமையதிபதியைத் திருப்திப்படுத்துவாராயின் பூச்சிகொல்லியை விடுவித்தல் வேண்டும்; அல்லது

(ஆ) அத்தகைய பூச்சிகொல்லியின் அத்தகைய சொந்தக்காரர் அல்லது அதனைத் தமதுடைமையில் வைத்திருக்கும் ஆள், பூச்சிகொல்லியை தமதுடைமையில் வைத்திருப்பதற்கு, இடம்பெயர்ப்பதற்கு, விற்பனை செய்வதற்கு அல்லது பயன்படுத்துவதற்குத் தாம் அதிகாரம் பெற்றுள்ளார் எனப் பணிப்பாளரைத் திருப்திப்படுத்தாவிடில், அத்தகைய பூச்சிகொல்லியின் சொந்தக்காருக்கு அல்லது அதனைத் தமதுடைமையில் வைத்திருக்கும் ஆளுக்கு அறிவித்தல் கொடுத்து, கைப்பற்றுகை எந்த இடப்பரப்பில் செய்

யப்பட்டதோ அந்த இடப்பரப்பின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானின் நீதிமன்றத்திற்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(3) உட்பிரிவு (2) (ஆ) வின்கீழ் நீதிவான் நீதிமன்றத்துக்குக் கொடுத்துதவப்பட்ட தகவலின்மேல் அத்தகைய நீதிமன்றம்—

(அ) பூச்சிகொல்லியின் சொந்தக்காரர் அல்லது அதனைத் தமதுடைமையில் வைத்திருக்கும் ஆள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ், அத்தகைய பூச்சிகொல்லியைத் தமதுடைமையில் வைத்திருப்பதற்கு, இடம்பெயர்ப்பதற்கு, விற்பனை செய்வதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு அதிகாரம் பெற்றவரல்லர் என விளக்கத்தின்பின்னர் காணின், அத்தகைய பூச்சிகொல்லி, நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறாகக் கையாளப்படுவதற்கெனப் பணிப்பாளருக்கு இழக்கப்படவேண்டுமெனக் கட்டளையிடல் வேண்டும் ; அல்லது

(ஆ) பூச்சிகொல்லியின் சொந்தக்காரர் அல்லது அதனைத் தமதுடைமையில் வைத்திருக்கும் ஆள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய பூச்சிகொல்லியை வைத்திருப்பதற்கு, இடம்பெயர்ப்பதற்கு, விற்பனைசெய்வதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு அதிகாரம் பெற்றிருக்கின்றார் என விளக்கத்தின்பின்னர் காணின், அத்தகைய பூச்சிகொல்லி அத்தகைய சொந்தக்காருக்கு அல்லது தமதுடைமையில் வைத்திருக்கும் ஆளுக்கு விடுவிக்கப்படவேண்டுமெனக் கட்டளையிடல் வேண்டும்.

*இரசாயனப் பகுப்பாய்வு.*

8. (1) அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவர், அவரால் கைப்பற்றப்பட்ட பூச்சிகொல்லியை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அல்லது அவரால் எடுக்கப்பட்ட ஏதேனும் மாதிரிப் பொருளை 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அது அழிக்கப்பட்டிருந்தாலன்றி, இரசாயனப் பகுப்பாய்வுக்கென அல்லது பரிசோதனைக்கென அங்கீகாரம்பெற்ற இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) அங்கீகாரம்பெற்ற இரசாயனப் பகுப்பாய்வாளர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்ட பூச்சிகொல்லியை இரசாயனப் பகுப்பாய்வு செய்துள்ளவிடத்து அல்லது பரிசோதனை செய்துள்ளவிடத்து, சான்றிதழொன்றை அல்லது அறிக்கையொன்றை அவர் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு வழங்குதல் வேண்டும் ; அச்சான்றிதழில் அல்லது அறிக்கையில் தமது இரசாயனப் பகுப்பாய்வின் அல்லது பரிசோதனையின் பெறுபேறுகளை அவர் குறிப்பிடுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "அங்கீகாரம்பெற்ற இரசாயனப் பகுப்பாய்வாளர்" என்பது, அங்கீகாரம்பெற்ற மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளர் ஒருவரையும் உள்ளடக்கும்.

*அங்கீகாரம் பெற்ற இரசாயனப் பகுப்பாய்வாளர்.*

9. (1) இச்சட்டத்தின் அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளின் நோக்கத்திற்கென அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரே அங்கீகாரம்பெற்ற இரசாயனப் பகுப்பாய்வாளராக இருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பணிப்பாளர் தலைமையதிபதியானவர், இச்சட்டத்தின்கீழ் தம்மால் நிறைவேற்றப்படும்படி தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய பணிகளை நிறைவேற்றுவதற்கென ஓர் உள்ளூர் அதிகாரசபையின் ஏதேனும் நிருவாக இடப்பரப்பிற்கு, அங்கீகாரம் பெற்ற மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளர் ஒருவரை எழுத்தில் அங்கீகரிக்கலாம்.

(3) ஆளெவரும், விதித்துரைக்கப்பட்ட தகைமைகளை அவர் கொண்டிருந்தாலன்றி, அவரை அங்கீகாரம்பெற்ற மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளர் ஒருவராக அங்கீகரிக்கப்படுதலாகாது.

7 ஆம், 8 ஆம் பிரிவுகளின் நோக்கங்களுக்காக பூச்சி கொல்லி என்பது அதன் தயாரிப்புக்குப் பயன் படுத்தப்படும் பொருளையும் உள்ளடக்கும்.

10. ஏழாம், எட்டாம் பிரிவுகளின் நோக்கங்களுக்காக, பூச்சி கொல்லியானது அத்தகைய பூச்சி கொல்லியின் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் பொருளை உள்ளடக்குதல் வேண்டும்.

தவறுகளும் தண்டங்களும்.

11. இச்சட்டத்தின் அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுள் எவற்றையும் மீறுகின்ற அல்லது அவற்றிற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஒவ்வோராளும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் பிடியாணையின்றிக் கைதுசெய்யப்படுவதற்கும் நீதிவான் நீதிமன்றத்தால் விளங்கப்படுவதற்கும் ஆளாதல்.

12. இச்சட்டத்தின்கீழ் அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் தவறொன்றைப்புரியும் ஒவ்வோராளும் பிடியாணையின்றிக் கைதுசெய்யப்படலாம் என்பதுடன், இச்சட்டத்தின்கீழான அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழான ஒவ்வொரு தவறும் நீதிவான் நீதிமன்றமொன்றினால் விளங்கப்படற்பாலதாதலும் வேண்டும்.

வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தல்.

13. (1) இச்சட்டத்தின்கீழான அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழான தவறொன்றுக்கான ஒரு குற்றவழக்கு—

(அ) அதிகாரம்பெற்ற ஓர் அலுவலராலன்றியும் ; அத்துடன்

(ஆ) அத்தவறைக் கண்டுபிடித்த தேதியிலிருந்து ஆறு மாத காலம் முடிவடைந்தபின்னரும்,

தொடுக்கப்படுதலாகாது.

(2) இச்சட்டத்தின்கீழான அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழான ஏதேனும் தவறுக்கான விளக்கத்தின்பொழுது எந்த நேரத்திலும், குற்றஞ்சாட்டப்பட்டவரல்லாத வேறு எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழான அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழான தவறைப்புரிந்துள்ளாரென நீதிமன்றத்துக்குத் தோன்றுமிடத்து, நீதிமன்றமானது, (1) ஆம் உட்பிரிவின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அந்த ஆளுக்கு எதிராக ஒரு குற்றவழக்குத் தொடுக்கப்பட்டிருந்

தது என்றுற்போன்று, அத்தகைய ஆளுக்குகெதிராக வழக்கு நடவடிக்கை தொடுக்கலாமென்பதுடன், அத்தகைய நோக்கத்துக்காக அத்தகைய வழக்கு நடவடிக்கைகளை மாற்றவோ திருத்தவோ அல்லது அதிலுள்ள ஏதேனும் குற்றச்சாட்டைப் பதிலீடுசெய்யவோ தத்துவமுடையதாயிருத்தலும் வேண்டும்.

**அங்கீகாரம் பெற்ற இரசாயனப் பகுப்பாய்வாளரின் அல்லது அங்கீகாரம் பெற்ற மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளரின் அறிக்கை.**

14. (1) அங்கீகாரம்பெற்ற இரசாயனப் பகுப்பாய்வாளர் ஒருவருக்கு அல்லது அங்கீகாரம்பெற்ற மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளர் ஒருவருக்குப் பரிசோதனைக்காக அல்லது இரசாயனப் பகுப்பாய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் பொருளின்மீது, அவரால் கையொப்பமிடப்பட்ட ஓர் அறிக்கையாக அல்லது ஒரு சான்றிதழாகக் கொள்ளப்படும் ஓர் ஆவணம், மறுதலிக்கப்பட்டாலன்றி, அதில் கூறப்பட்ட நிகழ்வுகளுக்கான முதற்றோற்ற எண்பிப்பாதல் வேண்டும்.

(2) எந்தக் கட்சிக்காரருக்கு எதிராக (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அறிக்கை அல்லது சான்றிதழ் காண்பிக்கப்படுகின்றதோ அந்தக் கட்சிக்காரர், விடயத்துக்கேற்றவாறு அங்கீகாரம்பெற்ற இரசாயனப் பகுப்பாய்வாளர் அல்லது அங்கீகாரம்பெற்ற மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளர் குறுக்கு விசாரணைக்காக கட்டளைவிட்டழைக்கப்படவேண்டுமெனக் கோருமிடத்து, நீதிமன்றம் அவரைக் கட்டளைவிட்டழைத்தல் வேண்டும் :

ஆயின், அத்தகைய சாட்சிக்காரர் போதிய காரணமின்றிக் கட்டளைவிட்டழைக்கப்பட்டுள்ளாரென நீதிமன்றம் அபிப்பிராயப்படுமாயின், அவரைக் கட்டளைவிட்டழைப்பதற்கான செலவுகளை நீதிமன்றத்துக்குச் செலுத்துமாறு அத்தகைய வேண்டுகோள் விடுக்கும் கட்சிக்காரருக்கு நீதிமன்றம் கட்டளையிடலாம்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள அறிக்கை அல்லது சான்றிதழ், அதனைக் காண்பிக்க எண்ணங்கொண்டிருக்கின்ற கட்சிக்காரர், எந்தக் கட்சிக்காரருக்கு எதிராக அதனைக் காண்பிக்க எண்ணங்கொண்டுள்ளாரோ அந்தக் கட்சிக்காரருக்கு அறிக்கையின் அல்லது சான்றிதழின் பிரதியொன்றையும், அத்துடன் அதனைக் காண்பிப்பதற்குத் தமக்குள்ள எண்ணம் பற்றி நியாயமான அறிவித்தல் கொடுத்திருந்தாலன்றியும், சான்றாக ஏற்றுக்கொள்ளப்படலாகாது.

**அதிகாரம் பெற்ற அலுவலர் தாம் வைத்திருக்கும் மாதிரிப் பொருளின் பாகத்தை நீதிமன்றத்தின் முன்னர் காண்பித்தல்.**

15. (1) அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மாதிரிப்பொருளைப் பாகம்பாகமாகப் பிரிப்பது தேவையாகுமிடத்து, (அதில் ஒரு பாகம் அவரால் வைத்திருக்கப்படல்வேண்டும்) அவரால் வைத்திருக்கப்பட்ட பாகம், அந்த மாதிரிப்பொருள் தொடர்பாகக் குற்றவழக்குத் தொடுக்கப்படும் நேரத்தில் நீதிமன்றத்தில் அவரால் காண்பிக்கப்படல் வேண்டும்.

(2) நீதிவான் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்ட மாதிரிப் பொருளின் பாகத்தை, இரசாயனப் பகுப்பாய்வுக்கென அல்லது பரிசோதனைக்கென அந்த மாதிரிப் பொருளின் வேறு ஏதேனும் பாகத்தை பகுப்பாய்வு செய்த அல்லது பரிசோதனை செய்த இரசாயனப் பகுப்பாய்வாளர் அல்லாத வேறோர் அங்கீகாரம் பெற்ற இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அல்லது அங்கீகாரம்பெற்ற மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளர் ஒருவருக்கு, தமது சொந்தக் கருத்தின்படி அல்லது வழக்குத் தொடுநரால் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரால் அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்பேரில், அனுப்பலாம்.

(3) மாதிரிப் பொருளின் பாகம், (2) ஆம் உட்பிரிவின் கீழ் எந்த இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்படுகின்றதோ, அந்த இரசாயனப் பகுப்பாய்வாளர், தமது அறிக்கையை அல்லது சான்றிதழை, அந்த மாதிரிப் பொருளின் பாகம் தம்மால் பெறப்பட்ட பின்னர் இருபத்தெட்டு நாட்களுக்குள் நீதிமன்றத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

(4) இரசாயனப் பகுப்பாய்வுக்கான அல்லது பரிசோதனைக்கான செலவு, நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறாக அத்தகைய கட்சிக்காரரால் செலுத்தப்படல் வேண்டும்.

16. இச்சட்டத்தின்கீழான அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்பொழுது— ஆட்கள் குழுவினால் புரியப்படும் தவறுகள்.

(அ) அந்த ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்குழுவின் ஒரு பணிப்பாளராக, பொதுமுகாமையாளராக, செயலாளராக அல்லது இதே போன்ற ஓர் அலுவலராகவிருந்த ஒவ்வோராளும்; அல்லது

(ஆ) அந்தக் குழு, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இல்லாதவிடத்து, தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்குழுவின் உறுப்பினராகவிருந்த ஒவ்வோராளும்,

தவறானது தனது சம்மதம் அல்லது ஒருப்பாடு இல்லாமலேயே புரியப்பட்டது எனவும், தமது பணிகளின் தன்மையைக் கருத்திற்கொண்டு அச்சூழ்நிலைகளில் அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்குத் தாம் பிரயோகித்திருக்கவேண்டியவாறான அத்தகைய எல்லா விழிப்புணர்வையும் தாம் பிரயோகித்தார் எனவும் அவர் எண்பித்தாலன்றி, அந்தத் தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

17. இச்சட்டத்தின்கீழ் அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ், நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்கு ஆளெவருக்கும் எதிராகத் தொடர்ச்சி, குற்றவழக்கு அல்லது வேறு சட்ட நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படலாகாது. நல்லெண்ணத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

18. (1) விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்படும் கருமங்கள் தொடர்பில், அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ, அந்தக் கருமங்கள் தொடர்பில், அத்துடன் குறிப்பாக, பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும், அல்லது அவற்றுள் எக்கருமம் தொடர்பிலும் அமைச்சர், ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :— ஒழுங்குவிதிகள்.

(அ) பூச்சிகொல்லியின் இறக்குமதி இச்சட்டத்திற்கு அல்லது இதன் கீழ் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க இருத்தல்வேண்டும் என ஏற்பாடு செய்வதற்கு ;

(ஆ) பொதுமக்களின் நலன் கருதி அல்லது அவர்களின் சுகாதாரத்திற்கு ஊறுவிளைவதைத் தடுப்பதற்கு, பூச்சிகொல்லியைத் தயாரிக்கும், பொதியிடும், களஞ்சியப்படுத்தும் அத்துடன் பரீட்சிக்கும் முறைகள் ; அல்லது

(இ) பூச்சிகொல்லியின் இரசாயனப் பகுப்பாய்வு அல்லது பரிசோதனை பூச்சிகொல்லியின் மாதிரிப் பொருளை எடுத்தற்கான நடைமுறை அத்துடன் பூச்சிகொல்லியின் இரசாயனப் பகுப்பாய்வுக்கு அல்லது பரிசோதனைக்குச் செலுத்தப்படவேண்டிய கட்டணப் பட்டியல்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசற்றில் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன், வெளியீட்டுத் தேதியில் அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும், கசற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியான அளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஒழுங்குவிதி எதுவும், எத்தேதியன்று அவ்வாறு நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படவேண்டுமோ, அத்தேதி கசற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்.

19. இச்சட்டத்தில் சந்தருப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலன்றி—

"அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர்" என்பது, அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் என்ற பதவியை அப்போதைக்கு வகிக்கும் ஆள் எனப்பொருள்படும் என்பதோடு, மேலதிக, பிரதி, சிரேட்ட உதவி அல்லது உதவி அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் என்ற பதவியை அப்போதைக்கு வகிக்கும் ஆளெவரையும் உள்ளடக்கும் ; அத்துடன்

"உள்ளூர் அதிகாரசபை" என்பது, ஏதேனும் அபிவிருத்தி சபை, மாநகரசபை, நகரசபை, பட்டினசபை அல்லது கிராமச்சபை எனப் பொருள்படும் என்பதோடு, அத்தகைய ஏதேனும் சபையால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் அத்துடன் நிறைவேற்றப்படும் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றை நேரொத்த அல்லது அவற்றையொத்த தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் என ஏதேனும் சட்டத்தால் அல்லது சட்டத்தின் கீழ், உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*